அவர்கள் தெரிவித்ததுபோல, நாளையதினம் இதே அவையில் விவர அறிக்கையை வைக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

முற்பகல் 10-25

(உ) விளாத்திகுளம் தொகுதி, புளியங்குளம், வைப்பாற்று வெள்ளத்தில் இறந்தவர் குடும்பத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லாம் ஆய்வில் இருக்கின்றன. பிறகு எடுக்கப்படும். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் ஒன்றுபோல் எழுந்து நின்றால், யார் பேசுவதைக் கேட்பது? நான் அவையை நடத்த வேண்டாமா? *(குறுக்கீடுகள்)*

விளாத்திகுளம் தொகுதி, "வைப்பாற்றில் 27-3-2008 அன்று புளியங்குளம் அருகே வெள்ள நீரில் மூழ்கி திரு. சின்னத்தம்பி என்கிற முனியசாமி இறந்துவிட்டதால் அவருடைய குடும்பத்திற்கு நிவாரணம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன் அவர்கள் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன். *(குறுக்கீடுகள்)*

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், எனது விளாத்திகுளம் தொகுதிக்குட்பட்ட புளியங்குளம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சின்னத்தம்பி என்கிற முனியசாமி தேவர் 27-3-2008 அன்று வைப்பாற்றைக் கடந்து தன் தோட்டத்திற்குச் செல்லும்போது பெய்த கன மழையால் திடீரென்று ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் அடித்துச் செல்லப்பட்டு மரணம் அடைந்துவிட்டார். அவருடைய உடலை தீயணைப்புத் துறையினரால்கூட கண்டுபிடிக்க முடியவில்லை. தூத்துக்குடியிலிருந்து சிப்பிக் குளிப்பவர்கள் வந்துதான் உடலை எடுத்தனர். உடலை விளாத்திகுளம் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றால், அங்கு post-mortem செய்வதற்குக்கூட மருத்துவர்கள் இல்லை. அவருக்கு முனியம்மாள் என்ற மனைவியும், கற்பகம் என்ற மகளும், திருமணம் ஆகாத சண்முகலட்சுமி என்ற மகளும், மணிகண்டன் என்ற மகனும் உள்ளனர். வயதான தந்தையும் அவருடன் இருந்து வந்திருக்கிறார்.

[திரு. போ. சின்னப்பன்] [2008 ஏப்ரல் 21

மிகவும் ஏழ்மையான குடும்பம். அவரைப் பிரிந்து வறுமையால் வாடும் அந்தக் குடும்பத்திற்கு உரிய நிவாரணம் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

விளாத்திகுளம் அரசு மருத்துவமனையில் எங்கள் அம்மா ஆட்சியின்போது இரவும் பகலும் மருத்துவர்கள் இருந்து வந்தார்கள். Caesarean operation-கூட அங்கே நடந்தது. ஆனால், இப்போது மருத்துவர்கள் இல்லை. Post-mortem செய்வதற்குக்கூட கோவில்பட்டியில் இருந்துதான் deputation அடிப்படையில் மருத்துவர்கள் வருகிறார்கள். ஆகையால், அங்கு நிரந்தரமாக மருத்துவர்களை நியமிக்க வலியுறுத்தி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே குறிப்பிட்டுள்ளதுபோல, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், புளியங்குளம் கிராமத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி என்கிற 45 வயதுடைய முனியசாமி தேவர், காப்பாற்ற பல முயற்சி செய்தும்கூட பலனின்றி பெருமழையிலே நீரில் மூழ்கி இறந்துவிட்ட சோகச் சம்பவத்தை எடுத்துச் சொல்லி, அந்தக் குடும்பத்திற்கு நிதியுதவி தரவேண்டும் என்று கூறியிருக்கின்றார்கள். தொடர்ந்து இதுபோன்ற இரங்கத்தக்க, வேதனையான எந்தச் சம்பவமானாலும் இந்த ஆட்சி அந்தக் குடும்பத்தைக் கைவிட்டதில்லை. அந்தவகையில் அவர்கள் சொன்னார்கள், அம்மா ஆட்சியில் யார், யாருக்கு எத்தகைய உதவிகள் செய்யப்பட்டன என்று. இந்த ஐயா ஆட்சியிலும் (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக அந்த உதவிகள் தொடரும் என்பதை அருமை நண்பருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(ஊ) மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் பணியிடங்களை நிரப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: No. எல்லோரும் உட்காருங்கள். "மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் முக்கியப் பணியிடங்கள் காலியாக உள்ளதால், நுகர்வோர் தங்களது குறைகளைத் தெரிவிக்க இயலாத நிலை நிலவுவது குறித்து" மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையிலே எடுத்துக்கொள்கிறேன். திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்)